ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2370/11 - 2024 පෙබරවාරි මස 07 වැනි බදාදා - 2024.02.07
*2370/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 94/ 47*(IX)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட “உடகந்தர ரஜ மகா விஹாரை புனிதப் பிரதேசம்” என அழைக்கப்படும் இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) “உடகந்தர ரஜ மகா விஹாரை புனிதப் பிரதேசம்” இற்கான பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
*2024, பெப்புருவரி 06.*

**அட்டவணை**

உடகந்தர ரஜ மகா விஹாரை புனிதப் பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

*தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, மகம் பத்துவ சிறு பிரிவினுள், ரனகெலிய (இல. 13) கிராம அலுவலர் பிரிவினுள் ரனகெலிய கிராமத்தில் அமைந்துள்ள* FTP *இல. 2 இனையுடைய நில அளவையாளர் தலைமையதிபதியின் 2018, யூன் மாதம் 08 ஆந் திகதியைக் கொண்ட இறுதித் திட்டத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. 8330 இனை அடங்கியுள்ளதும், பரப்பளவில் 7.7187 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-*

**காணித்துண்டு இல. *8330* - யோதகன்டியகொடன**

வடக்கு : *காணியளவீட்டுத் திட்டம் 830080*, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் *திட்டத்தில் காணித்துண்டு இல. 1*$^{v}$, *காணித்துண்டு இல. 8329* மற்றும் *காணித்துண்டு இல. 8331* ;

கிழக்கு : *காணித்துண்டு இல. 8331* ;

தெற்கு : *காணித்துண்டு இல. 8331* ;

மேற்கு : மேலே குறிப்பிடப்பட்டுள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் திட்டத்தில் காணித்துண்டு *இல. 8331, காணியளவீட்டுத் திட்டம் 830080, காணித்துண்டு இல. 1*$^{v}$ மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள *நில அளவையாளர் தலைமையதிபதியின் திட்டத்தில் காணித்துண்டு இல. 8329.*

EOG *02-0042*